தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 பிப்ரவரி 15, புதன்கிழமை

மாசி 3, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.''

குற்றமற்றவைகளாகிய சில சொற்களால் ஒரு கருத்தை விளக்கிச் சொல்ல அறியாதவரே பொருளற்ற சொற்கள் பலவற்றை அடுக்கிச் சொல்ல விரும்புவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் துவங்குவதற்கான மூலதனம்.

21—*வினா எண். 17989—திரு. எ. எம். சேதுராமன்; மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பால்வள கூட்டுறவு இணையம் துவங்க மாநில மத்திய அரசுகளின் பங்கு எவ்வளவு?

(ஆ) பால்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் பயன் பெற்றுள்ள மாவட்டங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு தமிழ்நாடு அரசு 198.32 இலட்ச ரூபாய் மூலதனப் பங்காக அளித்துள்ளது. மத்திய அரசிடமிருந்து யாதொரு மூலதனப் பங்கும் பெறப்படவில்லை.

(ஆ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மூலம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட ஒன்பது மாவட்டங்கள் பயன்பெற்றுள்ளன:—

(1) செங்கற்பட்டு

(2) தென் ஆற்காடு

(3) வட ஆற்காடு

(4) சேலம்

(5) தர்மபுரி

(6) பெரியார் மாவட்டம்
(7) கோயம்புத்தூர்
(8) நீலகிரி
(9) மதுரை.

திரு. ரா. கிருஷ்ணன்; தலைவரவர்களே, இந்தப் பால் வள கூட்டுறவு இணையம் இன்னும் சில மாவட்டங்களில் துவங்கப் படாமல் இருக்கிறதே, அங்கெல்லாம் எப்பொழுது துவங்குவதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களிலும் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது ஒன்பது மாவட்டங்களில் இந்த இணையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? அத்துடன் இன்னொன்றையும் அறிய விரும்புகிறேன். அரிசனங்கள் கூட்டுறவு முறையில் பால்பண்ணை வைத்து பால் உற்பத்தி செய்தால், அவர்களையும் ஒன்றாக இருப்பதற்கு, இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை, தனியாகவும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதும் இல்லை. அதற்குப் பதிலாக 100 லிட்டர் பாலை ஆறு மாதங்களுக்குக் கொடுத்தால் இணையத்திலோ, சொசைட்டியிலோ சேர்ப்போம் என்று சொல்வதாகக் கூறப்படுவது உண்மையா? அப்படியிருந்தால், அவ்வாறு இல்லாமல் செய்ய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் மாவட்டத் தலைவருடைய தலைமையில் ஒன்றியம் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மற்றப் பிரச்னையைப் பற்றித் தனியாகத் தகவல் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த ஒன்பது மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற கூட்டுறவு இணையங்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பெற்றிருக்கிறதா? சில மாவட்டங்களில் அரசாங்கமே நியமன நிர்வாக போர்டை நியமித்திருக்கிறது, சில இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரையே தலைவராகப் போட்டு ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே அந்த இடங்களிலெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைச் சீக்கிரமாகக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களில் சில மாவட்டங்களில் அதாவது வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் அங்கேயுள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவரே அந்த ஒன்றியத்தின் பெரும் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார். சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதன் தலைவர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் அங்கே ஏற்படுத்தப்படுவார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, வளர்ச்சி பெற்ற மாவட்டங்களிலே மட்டும் இந்த இணையங்கள் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்து மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்த ஒன்பது மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் வந்ததாகத் தெரியவில்லை. அதுவும் சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது பால்வளப் பெருக்குத் திட்டங்களிலே இந்த ஒன்பது மாவட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இராமநாதபுரம் மாவட்டப் பால் வளர்ச்சியை தமிழக அரசே மேற்கொண்டு, கடந்த ஆண்டு கூட, காரைக்குடியிலே ஒரு கோடி ரூபாய் அளவில் பால் பண்ணை அமைக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறது. அந்த வகையில் வேறு பல நடவடிக்கைகள் அந்த மாவட்டத்திற்கு பிரத்தியேகமாக எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் அதிகாரப் பற்றற்றவர்கள் நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே இப்பொழுது அதிகமாகப் பால் வருகிறது. அங்கே உற்பத்தியாகும் பாலை வாங்க மறுக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அங்கே ஏன் நிர்வாக போர்டு அமைக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே அந்த அந்த மாவட்டங்களுக்கு அமைக்கப்படும்.

திரு டி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பால்வள கூட்டுறவு இணையங்கள் ஒன்பது மாவட்டங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இணையம் அமைக்கப்படாத மாவட்டங்களில் இந்த நிதி ஆண்டில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இணையம் இயங்கி வருகிற மாவட்டங்கள் என்பது பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிற பால் வளர்ச்சித் திட்டத்தினுடைய அடிப்படையிலே நடத்தப்படுகிற மாவட்டங்களாகும். மற்ற மாவட்டங்களில் மாநில அரசின் நிதியுதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மீதான புகார்கள்.

22—* வினா எண். 19953— திரு. சி. கணேசன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மீது விஜிலன்ஸ் ஆண்ட்டி கரப்ஷன் துறைக்கு 8-10-1980 முதல் 30-6-1982 வரை அனுப்பப்பட்ட புகார்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப் பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) 36

(ஆ) 20

திரு. சி. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகள் மீது விஜிலன்ஸ் அதிகாரிகளால் வழக்குகள் போடப்பட்டு, விசாரணையின்போது நிரபராதிகள் என்று அவர்கள் நிரூபித்த பிறகு, உடனடியாக வேலையில் சேர்த்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் செய்யப்படும்போது, இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்ய தனி கவனம் செலுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்து கவனிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ****

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்பது விதி. * * * ஆகவே அவைகளை சட்டசபைக் குறிப்புகளிலிருந்து எடுத்து விடலாம்.

திரு.ரா.உமாநாத்; தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலை வருகிறது, அதை அகற்றுவதற்கு என்ன நடவடிக்கை என்று கேட்க வருகிறார் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உறுப்பினர் கேள்வியை திரும்பவும் கேளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.